**இன்றைய வேளாண் செய்திகள்**

**சேவூரில் ரூ. 9 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்**

**அவிநாசி**

ஜூன் 2: சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ. 9 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, நிலக்கடலை 1000 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,000 முதல் ரூ. 4,400 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,600 முதல் ரூ. 3,900 வரையிலும், மூன்றாவது ரக நிலக்கடலை ரூ. 3,300 முதல் ரூ. 3,500 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 9 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 9 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 100 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் அழகிரி சாந்தலிங்கம் (பொறுப்பு) கூறுகையில், சென்ற வாரத்தை விட குவிண்டாலுக்கு ரூ. 130 வரை விலை அதிகரித்திருந்தது என்றார்.

**கறிக்கோழி :பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றமில்லை**

**பல்லடம்**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும்

பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 70 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் திங்கள்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**<u>பவானிசாகர் நீர்மட்டம்</u>**

**ஈரோடு**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 47.70 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 359 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.9 டி.எம்.சி.

**<u>மட்டூர் அணை நீர்மட்டம்  39.60 அடி</u>**

**தஞ்சாவூர்,**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 39.60 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 3,413 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 844 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

**<u>வீட்டு காய்கறித் தோட்டம்  அமைக்க பயிற்சி</u>**

**கடலூார்,**

பாலூர் கிராம விவசாயிகள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு வீட்டு காய்கறித் தோட்டம் அமைத்தல் மற்றும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

கடலூார் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக செயல்படுத்தப்படும் கெடிலம் உபவடி நிலப்பகுதியில் தமிழ்நாடு நிலவளத் திட்டத்தின் கீழ், பாலூரில் உள்ள ஒற்றைச்சாளர தகவல் மையத்தில் விவசாயிகளுக்கு இப்பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் துரைசாமி ஒருங்கிணைந்து வீட்டுக் காய்கறி தோட்டம் அமைத்தலின் நோக்கங்கள், பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக விளக்கினார். தொடர்ந்து, இளநிலை ஆராய்ச்சி மாணவர் ரேவதி, வீட்டு காய்கறித் தோட்டம் அமைத்தலின் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கும், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கும் செயல்விளக்கம் அளித்தார்.

இப்பயிற்சியில் பாலூர் முன்னோடி விவசாயிகள் உள்பட 50 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ரமேஷ், தோட்டக் கலைத் துறை ஜெயக்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் இப்பயிற்சியில் பங்கேற்று கருத்துக்களை கூறினர். ஆராய்ச்சி மாணவர் முருகன் நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோடை மழையால் கிடைத்தது பலன்: தமிழகத்தின் பால் உற்பத்தி அதிகரிப்பு

**திருப்பூர்,**

கடந்த இரு மாதங்களில் பெய்த கோடை மழையால், பசுந்தீவனம் மற்றும் புல் வளர்ச்சி அதிகரித்துள்ளது; மாடுகள் பசுந்தீவனம் உட்கொள்வதால், பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

தமிழகத்தில், மொத்தம் 8,230 பால் உற்பத்தி சங்கங்கள் உள்ளன. ஒரு நாளைக்கு 23 லட்சம் லிட்டர் பால், மாநிலம் முழுவதும் உள்ள ஆவின் பூத்துகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. நடப்பாண்டு துவக்கத்தில் கடும் வறட்சி காரணமாக, பால் உற்பத்தி 20 லட்சம் லிட்டராக குறைந்தது. கலப்பு தீவனம், உலர் தீவனம், பசுந்தீவனம் விலை 50 சதவீதம் வரை உயர்ந்ததால், பலர், மாடுகளை விற்றனர். ஆவின் பால் விலையை விட, லிட்டருக்கு மூன்று ரூபாய் வரை உயர்த்தி வழங்கியதால், பலர், தனியார் பால் நிறுவனங்களுக்கு தாவினர். அதனால், ஆவின் பூத்களில் பால் தட்டுப்பாடு ஏற்பட்டது. பால் உற்பத்தி குறைவால் வாடியிருந்த ஆவின் நிர்வாகம், கடந்த இரு மாதங்களாக பெய்த மழையால், புத்துணர்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக, ஈரோடு, மேட்டூர், சேலம்,

திருப்பூர், கோவை, தர்மபுரி, கிருஷ்ணகிரி பகுதியில் கன மழை பெய்து பசுந்தீவனம் மற்றும் கோரைப்புல் வளர்ச்சி அதிகரித்துள்ளது.
பால் உற்பத்தியாளர் சங்க மாநில பொது செயலாளர் ராஜேந்திரன் கூறியதாவது: கடந்த இரு மாதங்களில் நான்கு முதல் ஆறு முறை மழை நன்றாக பெய்து விட்டது. அதிக அளவில் புல் வளர்ந்துள்ளதால், மேய்ச்சலுக்கு பிரச்னையில்லை. 4 முதல் 5 லிட்டர் பால் கறந்த மாடுகள், ஆறு லிட்டர் பால் கறக்கின்றன. சேலத்தில் 5,000 லிட்டர், ஈரோட்டில் 3,000 லிட்டர், திருப்பூரில் 2,500 லிட்டர் பால் கூடுதலாக ஆவின் பூத்களுக்கு வருகிறது. மாநிலத்தின் பால் உற்பத்தி 20.50 லட்சம் லிட்டரில் இருந்து, 22.50 லட்சம் லிட்டராக ஒரே மாதத்தில் உயர்ந்துள்ளது. இதை நிலை தொடர்ந்தால் ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு இருக்காது,' என்றார். ஆவின் அதிகாரிகள் கூறுகையில் 'தமிழகத்தின் பால் உற்பத்தி இரண்டு லட்சம் லிட்டர் வரை உயர்ந்துள்ளதால், வெளிமாநிலங்களில் இருந்து வெண்ணெய், பால் பவுடர் வாங்குவதை தமிழக அரசு நிறுத்தியுள்ளது; விரைவில் வெளிமாநிலத்தில் இருந்து பெறப்படும் பால் அளவு குறையும்,' என்றனர்.

## மூன்று தினங்களில் தென்மேற்கு பருவமழை

'வங்கக் கடலில் சாதகமான சூழல் நிலவுவதால், தென்மேற்கு பருவமழை, இன்னும், மூன்று தினங்களில் துவங்க வாய்ப்புள்ளது. இதன் மூலம், தமிழகத்தின் சில பகுதிகள் மற்றும் கேரளாவில் மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
ஆண்டு தோறும், ஜூன் முதல் செப்டம்பர் இறுதி வரை, தென்மேற்கு பருவமழை காலம். இக்கால கட்டத்தில், வங்கக் கடல் பகுதியில், தென்மேற்கு பருவக்காற்று வீசுவதால், கேரளாவில் மழை துவங்கி, படிப்படியாக நாட்டின் மற்ற பகுதிகளுக்கு பரவும். வழக்கமாக, ஜூன் 1ம் தேதி, கேரளாவில் தென்மேற்கு பருவமழை துவங்கும். இந்தாண்டு, சற்று முன்னதாகவே துவங்கும் என, முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால், சாதகமான சூழல் ஏற்படவில்லை. இந்நிலையில், 'இன்னும், மூன்று - நான்கு நாட்களில், தென்மேற்கு பருவமழை துவங்கலாம்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தெற்கு அரபிக்கடல் பகுதியில் துவங்கி, மாலத்தீவு, குமரிக்கடல் பகுதியில் பரவி, தமிழகத்தின் சில பகுதிகளிலும் மழை பெய்யும் என, கூறப்படுகிறது. தமிழகம் மழை மறைவு பிரதேசமாக இருப்பதால், மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில், தென்மேற்கு பருவமழை பெய்யும். குறிப்பாக, கன்னியாகுமரி, நெல்லை, கோவை, நீலகிரி மாவட்டங்கள்

இதில் செழிப்படையும். தென்மேற்கு பருவமழையால், ஆண்டு மழையில், 33 சதவீதத்தை தமிழகம் பொதுவாக பெறும். இந்தாண்டு, இயல்பான அளவை தாண்டி மழை பெய்யுமா என்பதை, பொறுத்திருந்து பார்க்கலாம்.

## சென்னையில் சாரல் மழை

**சென்னை:**சென்னையில் தி.நகர்,ஈக்காட்டுதாங்கல், கிண்டி, உள்ளிட்ட பல பகுதிகளில் சாரல் மழை பெய்கிறது.

## தமிழக கோவில்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு: ஜூன் 30ம் தேதிக்குள் முடிக்க கமிஷனர் உத்தரவு



**சென்னை:** தமிழகத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்கள், குளங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில், இம்மாதம், 30ம் தேதிக்குள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தும்படி, அனைத்து கோவில் செயல் அலுவலர்களுக்கும், அறநிலையத் துறை கமிஷனர், தனபால் உத்தரவிட்டுள்ளார்.

## மழை நீர் சேகரிப்பு:

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில், மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த, துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், கடந்த வாரம் நடந்தது.

இதில், அறநிலையத் துறை கமிஷனர் தனபால் பேசியதாவது: சமீபத்தில் அனைத்து கோவில்களிலும், ஆத்மார்த்த உணர்வோடு, மழை வேண்டி யாகம் நடத்தினீர்கள்; அதன் பயனாக மழை பெய்தது. அதேபோல், ஆத்மார்த்த உணர்வோடு, கோவில், கோவிலுக்கு சொந்தமான குளங்கள், கோவில் அலுவலகம், பக்தர்கள் தங்கும் விடுதி, ஆகியவற்றில், மழை நீர் சேகரிப்பு அமைப்பு

ஏற்படுத்துங்கள். மழைநீர் சேகரிக்க, பூமிக்கடியில் குறைந்தது, ஐந்து உறைகளை இறக்க வேண்டும். இதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்புங்கள். உடனடியாக நிதி ஒதுக்கப்படும். கோவில் வளாகத்தில் விழும் மழைநீரை முழுமையாக சேகரிக்க, தேவையான நடவடிக்கையை, இம்மாதம், 30ம் தேதிக்குள் முடிக்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

தமிழகத்தில், 36,488 கோவில்கள்; 56 திருமடங்கள் - அவற்றோடு இணைந்த கோவில் கள், 58; சமணர் கோவில்கள் 17 மற்றும் அறக்கட்டளைகள் உள்ளன. இவற்றில் முதல்கட்டமாக, நிதி வசதி கொண்ட, 4,500 கோவில்கள், அவற்றுக்கு சொந்தமான 1,500 குளங்கள், பக்தர்கள் தங்கும் விடுதி, அலுவலகம் உட்பட, 1,500 இடங்களில், மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது.

## துவக்க விழா:

இதன் துவக்க விழா, நேற்று, பெரும்பாலான கோவில்களில் நடந்தது. சென்னை, ராயப்பேட்டையில் உள்ள, சித்திபுத்தி விநாயகர் கோவில், நுங்கம்பாக்கம் வெங்கடேஸ்வர பெருமாள் கோவில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில், திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவிலில், மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த, அடிக்கல் நாட்டப்பட்டது.

இதுகுறித்து, கோவில் செயல் அலுவலர்கள் கூறியதாவது: கோவில் வளாகத்தில் உள்ள, அனைத்து கட்டடங்களுக்கும், மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கு, 4,000 - 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும்; குளங்களுக்கு கூடுதல் செலவாகும். இதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பினால், உடனடியாக நிதி ஒதுக்குவதாக, கமிஷனர் தெரிவித்துள்ளார். எனவே, மதிப்பீடு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்

## துவக்கம் ! : முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி... : தோட்டக்கலைப் பண்ணையில் தீவிரம்

**விருத்தாசலம்:** விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், 3 லட்சம் முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யும் பணி துவங்கியது. மாவட்டத்தில் விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, வடலூர், குறிஞ்சிப்பாடி, அண்ணாகிராமம் பகுதிகளில் ஒரு லட்சம் ஏக்கரில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டது. கடந்த 2011 டிசம்பர் 30ம் தேதி வீசிய "தானே' புயலில் ஒரு கோடிக்கும் அதிகமான முந்திரி மரங்கள் வேருடன் சாய்ந்தன. அதைத் தொடர்ந்து "தானே' புயல் மறுவாழ்வு

திட்டத்தில், புயலால் பாதித்த விவசாயிகளுக்கு விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையம், வனத்தோட்டக் கழகம், தோட்டக்கலைத் துறை, நெய்வேலி தோட்டக்கலைத் துறை மற்றும் அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சரிகள் மூலம் 25 லட்சம் முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டது. தற்போது, "தானே' புயல் மறுவாழ்வுத் திட்டத்தில் குழாய் கிணறு அமைத்து, சொட்டுநீர் பாசனம் மூலம் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்க விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் 3 லட்சம் முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி கூறுகையில், "புயல் பாதித்த விவசாயிகளுக்கு "தானே' மறுவாழ்வுத் திட்டத்தில் குழாய் கிணறு அமைக்க தனி நபருக்கு (15 ஏக்கர் நிலம்) 50 சதவீத மானியமாக 3.8 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதன் மூலம் பாதித்த முந்திரி மரங்களை முழுமையாக அகற்றிவிட்டு வி.ஆர்.ஐ., -3 ரக ஒட்டுச் செடிகள் நட்டு, சொட்டுநீர் பாசனம் மூலம் பராமரிக்க வேண்டும். முந்திரி ஒட்டுச் செடிகள், நடவு கூலி, பராமரிப்பு செலவுக்கு மானியம்; சொட்டு நீர் பாசனத்திற்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டுக்கு "தானே' புயல் மறுவாழ்வுத் திட்டம் மற்றும் தேசிய தோட்டக் கலை இயக்கம் சார்பில் விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 3 லட்சம் வி.ஆர்.ஐ., -3 ரக முந்திரி ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. வரும் ஆகஸ்டு மாத இறுதியிலிருந்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்' என்றார்.

## இந்திய காபி ஏற்றுமதி வருவாய் 5 மாதங்களில் ரூ.2,567 கோடி



**புதுடில்லி** :சென்ற ஜன., – மே வரையிலான ஐந்து மாதங்களில், இந்தியாவின் காபி ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 9.32 சதவீதம் வளர்ச்சி கண்டு, 2,567

கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 2,348 கோடி ரூபாயாக இருந்தது.சர்வதேச அளவில், காபி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள பிரேசிலில், இதன் உற்பத்தி சரிவடையும் என, எதிர்பார்க்கப் படுகிறது. இதனால்,
உலகளவில் காபி விலை உயர்ந்து வருகிறது.
சர்வதேச சந்தையில் காபி விலை, கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது, நடப்பாண்டு,80 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.இதையடுத்து, ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு டன் காபியின் சராசரி விலை, 9 சதவீதம் வளர்ச்சி கண்டு, 1,47,394 ரூபாயிலிருந்து, 1,61,160 ஆக அதிகரித்துள்ளது என, என, காபி வாரியம் தெரிவித்துள்ளது.
மதிப்பின் அடிப்படையில், காபி ஏற்றுமதி சிறப்பாக வளர்ச்சி கண்டுள்ள நிலையில், அளவின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 1,59,295 டன்னிலிருந்து, 1,59,275 டன்னாக சற்று சரிவடைந்துள்ளது.மேற்கண்ட ஏற்றுமதியில், ரோபஸ்டா மற்றும் அராபிகா வகை காபியின் பங்களிப்பு முறையே, 73,645 டன் மற்றும் 43,465 டன் என்ற அளவில் உள்ளன.மேலும், இன்ஸ்டன்ட் காபி ஏற்றுமதி, 91 சதவீதம் அதிகரித்து, 9,850 டன்னிலிருந்து, 18,875 டன்னாக மிகவும்
உயர்ந்துள்ளது.
நடப்பு 2013–14ம் பருவத்தில் (அக்.,–செப்.,), நாட்டின் ஒட்டு மொத்த காபி உற்பத்தி, 3,11,500 டன்னாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இது, இதற்கு முந்தைய பருவ உற்பத்தியுடன் (3,18,200 டன்) ஒப்பிடுகையில், 2.1 சதவீதம் குறைவாகும்.இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம், ஜோர்டான், துருக்கி, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்கு, இந்தியா அதிகளவில் காபியை ஏற்றுமதி செய்து வருகிறது.

## சேலத்தில் இடியுடன் பலத்த மழை

**சேலம்:** சேலத்தில், நேற்று மாலை, 4.30 மணிக்கு பலத்த இடி இடித்தது. அப்போது, டவுன் ரயில்வே ஸ்டேஷன் அருகில், பிரசித்தி பெற்ற சாஸ்தா ஐயப்பன் கோவில் அருகில் உள்ள, காந்தி மண்டபத்தில், கோவில் பூஜையில் கலந்து கொள்வதற்காக 100 புரோகிதர்கள் தங்கி இருந்தனர். இந்நிலையில், பலத்த இடி ஒன்று, கோவில் அருகில் மரத்தின் மீது விழுந்ததில் மரம் தீ பிடித்தது. அப்போது, இடியின் தாக்கம் மின் வயரில் பாய்ந்து, மொபைல்ஃபோன் சார்ஜர் வெடித்தது. இதில், சென்னையை சேர்ந்த சங்கர்சாய் என்பவர் முகத்தில் காயம் ஏற்பட்டு தனியார்

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தீ பிடித்த மரத்தை செவ்வாய்ப்பேட்டை தீயணைப்பு துறையினர், விரைந்து வந்து அணைத்தனர்.

இடியுடன் மின்னல் சேர்ந்து தாக்கியதில், கோம்பைபட்டியை சேர்ந்த கணேசன், 25 என்பவரது வீட்டு திண்ணை உடைந்து சேதம் ஏற்பட்டது. வீட்டில் இருந்த மின் விளக்குகள் சேதம் ஏற்பட்டது. கொண்டலாம்பட்டி மற்றும் சேலம் நகரின் பல பகுதிகளில் பலத்த மழையால், ரோடுகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது. சாக்கடை கழிவுகள் ஆங்காங்கே தேங்கி நின்றன. இரவு வரை தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது.

## ஏற்காட்டில் கன மழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**ஏற்காடு:** ஏற்காட்டில், ஐந்து மணி நேரம், பெய்த கன மழையால், சுற்றுலா பயணிகள் அவதிப்பட்டனர். கிராமங்கள் இருளில் மூழ்கின. சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நேற்று மதியம், 2 மணி முதல், மாலை, 7 மணி வரை பலத்த மழை பெய்தது. மழை நீர், சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் பொது மக்கள் தங்கள் வீடுகளிலேயே முடங்கினர். ஏற்காட்டை சுற்றி பார்க்க வந்த, சுற்றுலா பயணிகள் லாட்ஜ்களில் தங்கி பொழுதை கழித்தனர். தொடர் மழையால் வாகனங்கள் எந்த இடத்துக்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஏற்காட்டை சுற்றியுள்ள, 67 கிராமங்களிலும் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டதால், மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். இது குறித்து, ஏற்காடு, மின்வாரிய உதவி பொறியாளர் வீரேந்திர குமாரிடம் கேட்டபோது, ""கேரிமேடு மின் நிலையத்தில் ஏற்பட்ட பாதிப்பினால் தான் மின்சாரம் துண்டிக்கப்பட்டது; அவை விரைவில் சரி செய்யப்படும்," என்றார்.

## 23 டன் காய்கள் வரத்து ரூ.5 லட்சத்துக்கு விற்பனை

**ஈரோடு:** ஈரோடு, சம்பத் நகர் உழவர் சந்தையில், நேற்று முன்தினம், ஒரே நாளில், 23 டன் காய், கனிகள் விற்பனைக்கு வந்தன. ஈரோடு சம்பத் நகரில் உழவர் சந்தை இயங்கி வருகிறது. மாத முதல் தேதி என்பதால், தினசரி மார்க்கெட்டுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. எனவே, உழவர் சந்தைகளில், விற்பனை கணிசமாக உயரும், என்று எதிர்பார்க்கப்பட்டது. அதுபோல், நேற்று முன்தினம், 23 டன் காய், கனிகள் விற்பனைக்கு வந்தது. 138 விவசாயிகள், உழவர் சந்தைக்கு காய், கனிகளை கொண்டு வந்திருந்தனர். வாடிக்கையாளர்கள், 3,800 பேர் வந்திருந்தனர். ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பிலான, வர்த்தகம் நடந்தது. இங்கிலீஷ் காய்களின் விலை மட்டும் சற்று அதிகரித்து இருந்தது. காய்கள் விலை விபரம்

கிலோ-ரூபாயில்: அவரை,45, பீன்ஸ்,60, உருளை கிழங்கு,30, கேரட்,40, பீட்ரூட்,30, குடமிளகாய்,40, கருணை கிழங்கு,70, இஞ்சி,130, தேங்காய்,8 முதல், 20 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. முருங்கை காய், கடந்த சில தினங்களுக்கு முன், 40 ரூபாய் வரை விற்கப்பட்டது. பலத்த சூறாவளி வீசுவதால், தற்போது கிலோ, 17 ரூபாய்க்கு மட்டுமே விற்கிறது. தக்காளி, 13க்கும் கிடைத்தது. பெரும்பாலான நாட்டு காய்கறிகள், விலை குறைந்த காணப்பட்டது. பழங்களை பொறுத்தவரை, மாதுளை கிலோ, 130 ரூபாய், ஆப்பிள், 170 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. தினசரி மார்க்கெட் விடுமுறை என்பதால், உழவர் சந்தைக்கு அதிகாலையிலேயே, பொதுமக்கள் அதிகளவில் கூடி, காய்கனிகளை வாங்கி சென்றனர்.

<u>கவுந்தப்பாடியில் அதிகபட்ச மழை பதிவு</u>

**ஈரோடு:** கவுந்தப்பாடியில், மிக அதிகபட்சமாக மழை பெய்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில், அக்னி நட்சத்திர வெயில், கடந்த, 28ம் தேதி முடிவுக்கு வந்தாலும் கூட, வெயிலின் தாக்கம் சற்றும் குறையவில்லை. பகல் நேரத்தில் வெயில் சுட்டெரிக்கிறது. மழை பொழிவற்ற, வறண்ட வானிலை தொடர்வதால், மக்கள் பெரிதும் அவதியுற்று வருகின்றனர். வெப்ப சலன ம் காரணமாக, தமிழகத்தில் மழை பெய்யும், என, சில தினங்களுக்கு முன், தமிழக வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. இதேபோல், நேற்று முன்தினம் மாலை, மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களிலும், மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டது. ஆனால், சில இடங்களில் ம ட்டுமே, மழை பெய்துள்ளது. எல ந்தகுட்டை மேட்டில், 14 மி.மீ., கோபி, 22 மி.மீட்டர், கவுந்தப்பாடி, 46 மி.மீட்டர் மழையளவு பதிவாகி உள்ளது. இம்மழையால் கவுந்தப்பாடி, கோபி உள்ளிட்ட பகுதிகளில்
குளிர்ச்சியான கால நிலை, நேற்று நிலவியது. வரும் நாட்களிலும், இதே போன்று மழை பெய்தால், நிலத்தடி நீர் மேம்படும். இப்பகுதியில் உள்ள, சிறு அணைகளில் நீர் நிரம்பும் என்று, விவசாயிகள், பொதுமக்கள் தெரிவித்தனர். ஆனால், ஈரோடு உள்ளிட்ட மா வட்டத்தின் ஏனைய பகுதிகளில், மழை பெய்யவில்லை. இதனால் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

<u>வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் வாழை, தேங்காய் ரூ.6 லட்சத்துக்கு விற்பனை</u>

**கோபிசெட்டிபாளையம்:** கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், ஆறு லட்சம் ரூபாயில், வாழைத்தார்கள் மற்றும் தேங்காய், ஏலத்தில் விற்பனையானது. ரஸ்தாளி, மொந்தன், பச்சநாடன், மோரீஸ், செவ்வா ழை, பூ பழம், தேன்வாழை என, 50க்கும் மேற்பட்ட வா ழை ரகங்கள், கோபி, சத்தி, கொடுமுடி, கரூர், திருச்சி, தேனி ஆகிய மாவட்டங்களில், அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

வாழைப்பழங்கள் மொத்தம், 12 மாத சாகுபடியாகும். நாட்டு வாழைப்பழங்களு க்கு இணையாக "ஹைபிரேட்' ரக வாழை சாகுபடி, தமிழகத்தில் பரவலாக அதிகரித்துள்ளது. கேரளா மாநிலத்தில் அதிகளவில் சாகுபடியாகும், கிராண்டு நைன், ரெட் பனானா, நேந்திரா ஆ கிய "ஹைபிரைடு' ரகங்கள், தமிழகத்திலும் பரவலாக சாகுபடி அதிகரித்துள்ளது.

ஈரோடு மாவட்டம் மற்றும் சுற்று பகுதியில் உள்ள பாசன நிலங்களில், வாழை சாகுபடி அதிகம். இப்பகுதி விவசாயிகள், வாழை தார்களை, கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்து க்கு, விற்பனைக்காக கொ ண்டு வருவர். இதற்காக வாரத்தில், புதன் மற்றும் சனிக்கிழமைகளில், இங்கு ஏலம் நடக்கும். அதன்படி, கோபியில் நடந்த ஏலத்தில், 5,000 தார் வரத்தானது. கத ளி, ஒரு கிலோ, 38 ரூபாய்க்கும், நேந்திரம், 27 ரூபாய்க்கும் விலைபோனது.

செவ்வாழை தார், 700 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 300 ரூபாய், தேன்வாழை, 500 ரூபாய், ரஸ்த்தாளி, 450 ரூபாய், மொந்தன், 320 ரூபாய், பூவன், 300 ரூபாய், பச்சைநாடான், 240 ரூபாய்க்கு விலைபோனது. விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும் மொத்தம், ஐந்து லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. இந்த தார்களை, திருப்பூர் மற்றும் ஊத்துக்குளி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். இதேபோல், தேங்காய்களுக்கான ஏலமும் நடந்தது. மொத்தம், 8,000 தேங்காய் வரத்தானது. ஒரு காய், 8.50 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காய்களும், 87,000 ரூபாய்க்கு விற்பனையானது.

## கொட்டிய மழையால் நிறைந்த தடுப்பு அணை

**சத்தியமங்கலம்:** திம்பம் மலைப்பகுதியில், கடந்த மூன்று நாட்களாக பெய்த, கனமழையால், தடுப்பு அணைகள் நிறைந்தது. சத்தியமங்கலம் அடுத்துள்ளது திம்பம் மலைப்பகுதி. கடல் மட்டத்தில் இருந்து, 1,105 மீட்டர் உயரம் கொண்டதாகும். இந்த மலைப்பகுதியில் எப்போதும் "ஜில்' என்று, குளிர்காற்று வீசும். இதனால், இப்பகுதியை "குட்டி கொடைக்கானல்' என்றும், அழைப்பார்கள்.

ஆனால், கடந்த, இரண்டு ஆண்டாக திம்பம் மலைப்பகுதியில், பருவமழை சரியாக பெய்யவில்லை. இதனால், வனப்பகுதியில் இருக்கும் குளம், குட்டைகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டது. இதனால், வனவிலங்குகள் தண்ணீர் இல்லாமல், வனப்பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களுக்கு, படையெடுக்கும் சம்பவங்களும் நடந்தது. இவ்வாறு வனவிலங்குகள் தண்ணீர் தேடி சாலையை கடந்து செல்லும்போது, வாகனங்களில் அடிபட்டு யானை, காட்டெருமை, கரடி, மான் போன்ற விலங்குகள் இறந்துள்ள, மோசமான சம்பவங்களும் நடந்துள்ளது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக, திம்பம் மலைப்பகுதியில், சூறாவளி காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. இந்த கனமழையின் காரணமாக, வனப்பகுதிக்குள் ஓடும் வன ஓடைகளில், தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், பண்ணாரி அருகே உள்ள புது குய்யனூர் தடுப்பு அணைகள், திம்பம் மலைப்பகுதியில் பெய்த மழையின் காரணமாக நிரம்பியுள்ளது.

தவிர, வனப்பகுதிக்குள் இருக்கும் குளம், குட்டைகளிலும், தண்ணீர் நிரம்பியுள்ளதால் வனவிலங்குகளுக்கு, தற்காலிகமாக தண்ணீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது.

## <u>பருவநிலை மாற்றத்தால் வேளாண் உற்பத்தி பாதிப்பு</u>

**மரக்காணம்:** பருவத்தில் பெய்ய வேண்டிய மழை பொய்த்ததால் மரக்காணம் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, வேளாண் உற்பத்தி பாதித்துள்ளது.

மரக்காணம் ஒன்றியத்தில் 56 ஊராட்சிகள் உள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகள் உள்ளது. இந்த ஏரிகள் மூலம் ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்றன. கடந்த ஆண்டு முழுவதும் மழை பொய்த்ததால் சம்பா போக சாகுபடி இல்லாமல் போய் விட்டது. இதனால் ஒரு போக சாகுபடிக்கு கூட வழியில்லாமல் விவசாயிகள் தள்ளப்பட்டனர் . வேளாண்மை உற்பத்தி பெருமளவு பாதித்தது. சராசரியாக விழுப்புரம் மாவட்டத்தில் பெய்ய வேண்டிய மழையளவு குறைந்ததுதான் காரணமாகும். இதனல் 90 சதவீதம் ஏரிகள் வறண்டு விட்டன. எனவே வரும் நடப்பு ஆண் டில் பருவ மழை துவங்கும் முன் விவசாயிகளுக்கு தண்ணீர் பிரச்னைகளை தவிர்க்க அரசு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

## <u>தோட்ட பயிர்கள் விவசாயிகள் ஆர்வம்</u>

**கச்சிராயபாளையம்:** விவசாயிகள் தோட்ட பயிர்களை அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். கச்சிராயபாளையம் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயம் அதிகளவில் நடக்கிறது. இப்பகுதியில் தண்ணீர் தட்டுபாடு நிலவுவதால் தோட்டப்பயிர்களை சாகுபடிசெய்து வருகின்றனர். தினசரி தேவையான காய்றிகள், கீரைகளுக்கு

கிராக்கி இருப்பதால் காய்கறிகளை அதிகளவில் பயிர்செய்து உழவர் சந்தையில் விற்கின்றனர். இதனால் அதிக லாபம் கிடைப்பதாக தெரிவித்தனர்.

## விழுப்புரத்தில் திடீர் மழை

**விழுப்புரம்:** விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று திடீரென மழை பெய்ததால், பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விழுப்புரம் மாவட்டத்தில் இரு தினங்களாக 105 டிகிரிக்கு மேல் வெயிலின் தாக்கம் இருந்ததால், பொது மக்கள் சிரமப்பட்டனர். கைக்குழந்தைகளுடன் வெளியூர்களுக்கு பயணம் சென்ற தாய்மார்கள் மிகவும் சிரமப்பட்டனர். நேற்றிரவு 7:30 மணிக்கு 8:00 மணி வரை விழுப்புரம், செஞ்சி, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம் ஆகிய பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது. செஞ்சியில் ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால் பொது மக்களுக்கு குளிர்ச்சியான காற்று கிடைத்தால், மகிழ்ச்சி அடைந்தனர். உளுந்தூர்பேட்டை, திண்டிவனம், ரிஷிவந்தியம் பகுதிகளில் பலத்த காற்றுடன் லேசான தூரல் மழை இருந்தது. மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்ததால், பொது மக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம்

**திருவெண்ணெய்நல்லூர்:** திருவெண்ணெய்நல்லூர் அடுத்த ஆலங்குப்பத்தில் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் வளர்மதி முருகேசன் தலைமை தா ்ங்கினார். துணைத்தலைவர் அன்பழகன், ஊராட்சி செயலாளர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தனர். கால்நடைத்துறை உதவிஇயக்குனர் குபேந்திரன், டாக்டர் தியாகீஸ்வரன் தலைமையிலான குழுவினர் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம், இனப்பெருக்க மருத்துவம், அடைப்பான் உள்ளிட்ட நோய்களுக்கு சிறப்பு சிகிச்சைகள் அளித்தனர். கால்நடை மருத்துவ உதவியாளர்கள் ஆரியநாராயணன், வள்ளி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மழையால் மார்க்கெட் கமிட்டிக்கு எள், மக்காசோளம் வரத்து குறைவு

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த மழையால் மார்க்கெட் கமிட்டிக்கு எள் மற்றும் மக்காசோளம் வரத்து நேற்று குறைவாக இருந்தது. கள்ளக்குறிச்சி பகுதியில் தண்ணீர் பிரச்னையை கருத்தில் கொண்டு குறுகிய கால பயிரான எள் விதைப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். கரும்பு, மணிலா பயிர்களில் ஊடுபயிராக எள் சாகுபடி செய்திருந்தனர். சாகுபடி செய்திருந்த அனைத்து விவசாய நிலங்களிலும் எள் பயிர்கள் அறுவடை செய்யப்படுகிறது. இதனால் சில வாரங்களாக மார்க்கெட் கமிட்டிக்கு எள் வரத்து அதிகரிக்க துவங்கியது.

கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று பல்வேறு பகுதியைச் சேர்ந்த 404 விவசாயிகள் 550 எள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சம் ரூ.6,169க்கும், குறைந்த பட்சம் ரூ.5,660க்கும் விலை போனது. இதேபோல் 32 விவசாயிகள் 200 மூட்டை மக்காசோளம் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சம் ரூ.1,340க்கும், குறைந்த பட்சம் ரூ.1,309க்கும் விலை போனது. கடந்த வாரம் ஒரு நாளைக்கு சராசரியாக 700 மூட்டைகள் எள் வரத்து இருந்தது. கடந்த வாரம் பெய்த மழையால் எள் பயிரினை உலர வைக்க முடியாமல் போனதால் வாரத்தின் முதல் நாளான நேற்று 550 மூட்டைகள் என குறைவாகவே காணப்பட்டது.

## மானியத்தில் கருவிகள்

**சிங்கம்புணரி** : சிங்கம்புணரி வட்டார விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்படுகிறது. திருந்திய நெல் சாகுபடியில் களை யெடுக்கும் கருவி விலை.ரூ 30 ஆயிரம். 50 சதவீத மானியம் போக,ரூ.15 ஆயிரத்திற்கு கிடைக்கும். தானியங்களை பாதுகாக்க தேவையான தார்பாய்,மருந்து தெளிப்பான்,உரம்,பூச்சி கொல்லி மருந்து, சிங்சல் பேட்,நுண் உரம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு உள்ளவர்கள் சிங்கம்புணரி வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## உயரும் வாழை இலை விலை; முகூர்த்த நாளில் கட்டு ரூ. 800

**ராஜபாளையம்** : மூகூர்த்த நாட்களில் வாழை இலை, கட்டு 800 ரூபாய் வரை விற்பதால், பல மெஸ்களில் பேப்பர் இலை பயன்படுத்தப்படுகிறது. சாதாரண நாட்களில் வாழைஇலை கட்டு, 150 முதல் 200 ரூபாய்க்கு விற்கப்படும். ஒரு கட்டில் 150 இலைகள் இருக்கும். பெரிய, நடுத்தர, சிறிய ஓட்டல்கள், மெஸ்களில் வாழைஇலை பயன்பட்டன. முகூர்த்த நாட்களில் மட்டும், வாழைஇலை கட்டு 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதை தாக்குபிடிக்க முடியாத, சிறிய ஓட்டல்கள் மற்றும் மெஸ்களில், பேப்பர் இலை பயன்படுத்துகின்றனர். இலை வியாபாரிஒருவர் கூறுகையில், ""மற்ற நாட்களில் இலைகட்டு 150 ரூபாய்க்கு தான் விற்கப்படுகிறது. முகூர்த்த நாட்களில் மட்டும், கட்டு விலை அதிகரிக்கிறது. மறுநாள் , கட்டின் விலை குறைந்து, 150 ரூபாய்க்கு வருகிறது," என்றார்.

மெஸ் உரிமையாளர் கணேசன், ""இரு ஆண்டுகளுக்கு முன் வரை, வாழைஇலை கட்டில், 200 இலைகள் இருக்கும். விலையும் அதிகமாக இருக்காது. தற்போது 150 இலைகள் தான் உள்ளன. முகூர்த்த நாட்களில், கட்டு 800 ரூபாய்க்கு விற்பதால், சமாளிக்க முடியாமல், பேப்பர் இலையை பயன்படுத்துகிறோம். ஒரு சாப்பாடு 50 ரூபாய், இதில் கூட்டு, பொறியல், சாம்பார், வத்தல் குழம்பு, ரசம், பாயாசம், ஊறுகாய், அப்பளம் இருந்தால், கூட்டம் வருகிறது. வாழைஇலையை பயன்படுத்தினால், செலவு அதிகமாகும் என்பதால், மாறவேண்டிய கட்டாயம் உள்ளது, '' என்றார்.

<u>கோடை மழையால் கம்பு சாகுபடி அதிகரிப்பு</u>

**தர்மபுரி:** மாவட்டத்தில் பெய்த கோடை மழையின் காரணமாக, கம்பு சாகுபடி அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள் கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட சிறு தானிய பயிர்களை ஆண்டு முழுவதும் மானாவாரியாகவும், இறவை பாசனத்திலும், சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக, பென்னாகரம் பகுதியில், விவசாயிகள் கம்பு சாகுபடியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டத்தில் கோடை மழையை எதிர்பார்த்து, பென்னாகரம் பகுதியில் அதிகளவிலான விசாயிகள், கம்பு சாகுபடியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், மாவட்டத்தில் கோடை கால துவக்கத்தில், விவசாயிகள் எதிர்பார்த்த, கோடை மழை பெய்யவில்லை. இதனால், கம்பு கதிர் விடும் நேரங்களில், போதிய பாசன வசதியின்றி, கதிர்களில் பால் விடுவது குறைந்து காணப்பட்டது.

இதனால், விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சில தினங்களாக பெய்து வரும், கோடை மழையின் காரணமாக, கம்பு உள்ளிட்ட விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு பாசன வசதி கிடைத்தது. குறிப்பாக, கோடை மழையின் காரணமாக, கம்பு பயிர் நன்கு கதிர் விட்டு வளர்ந்துள்ளது. மேலும், தென்மேற்கு பருவமழை விரைவில் துவங்க உள்ளதால், கம்புக்கு தேவையான பாசன வசதி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இதனால், கோடையில் சாகுபடி செய்த கம்பு சாகுபடியில் அதிக மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர் பார்த்து உள்ளனர். மேலும் கம்புக்கு சந்தையில், நல்ல விலை கிடைத்து வருவதுடன், கால்நடை தீவனத்துக்கு பயன்படும் கம்பந்தட்டைகளும் நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மா விலை குறைவு; விவசாயிகள் கவலை

**பட்டிவீரன்பட்டி:** அய்யம்பாளையம் பகுதியில் மா விளைச்சல் அதிகமாக இருந்தும், விலை குறைவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். அய்யம்பாளையம் மருதாநதி அணைப்பகுதி, சித்தரேவு பகுதிகளில் மா சாகுபடி நடைபெறுகிறது. சப்பட்டை, கல்லாமை, காளைப்பாடி ஆகிய ரகங்களில் பழங்கள் விளைகின்றன இங்கு சாகுபடியாகும் பழங்கள் வெளி மாவட்டங்களுக்கும், கேரளாவிற்கும் சென்றது. இந்த ஆண்டு வெளி மாவட்ட, மாநில வியாபாரிகள் சந்தைக்கு வராததால், விலை குறைந்து விட்டது. இதனால் வத்தலக்குண்டு, திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு நேரடி விற்பனைக்கு செல்கிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மா விளைச்சல் குறைவாக இருந்தாலும், தேவை குறைந்ததால், விலை குறைந்து விட்டதாக விவசாயிகள் கவலையோடு தெரிவித்தனர்.

## பருத்தி வரத்து குறைந்தும் விலை இல்லை: விவசாயிகள் கவலை

**நத்தம்** : நத்தம் பகுதியில் இந்தாண்டில் பருவ மழை முற்றிலும் பெய்யாததால், பருத்தி வரத்து குறைந்தும் விலை அதிகரிக்காமல் இருப்பதால் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

நத்தம் ஒன்றியத்தில் மா, தென்னை, புளி ஆகிய சாகுபடிகளுக்கு அடுத்தாற் போல பருத்தி சாகுபடி அதிகளவில் செய்யப்படுகிறது. இப்பகுதிகளில் செல்லப்பநாயக்கன்பட்டி, மூங்கில்பட்டி, ஊராளிப்பட்டி, சமுத்திராப்பட்டி, சிறுகுடி, வத்திப்பட்டி, சாத்தாம்பாடி, ஆவிச்சிப்பட்டி, ந.புதுப்பட்டி, புன்னப்பட்டி, கோட்டையூர், சிறுகுடி, அரவங்குறிச்சி, செந்துறை, குட்டுப்பட்டி ஆகிய பகுதிகளில் பருத்தி சாகுபடி ஆண்டுதோறும் நடைபெறும்.இந்த ஆண்டும் போதிய மழை பெய்யவில்லை. இதனால் மானாவாரி மற்றும் இறவையில் சாகுபடி செய்த பருத்தியில் விளைச்சல் குறைவாகவே கிடைத்துள்ளது. பருத்தி விளைச்சல் குறைவால் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

கமிஷன்மண்டி உரிமையாளர் சரவணன் கூறியதாவது: நத்தம் பகுதி கிராமங்களில் கடந்தாண்டில் பெய்த மழையை வைத்து பருத்தி சாகுபடி செய்தனர். ஓரளவு வரத்து இருந்தது. அப்போது விலை கிலோ ரூ. 30 முதல் 35 க்கு விற்பனையானது. ஆனால், இந்தாண்டில் எதிர்பார்த்த மழை இல்லாததால் விளைச்சல் இல்லை. பருத்தி குறைந்தளவில் விற்பனைக்கு வருகிறது. இருந்தும் கடந்தாண்டை விட அதிக விலைக்கு விற்க வேண்டி பருத்தி தற்போது கிலோ ரூ.35 க்கு தான்

விற்கிறது. இதற்கு காரணம் அகில இந்தியளவில் பருத்தி பஞ்சு, நூலுக்கு விலை இல்லாதது தான், என்றார்.

## சீஸன் உச்சத்தை எட்டியதால் மாம்பழம் வரத்து அதிகரிப்பு

**திருச்சி:** மாம்பழ சீஸன் உச்சத்தை எட்டியுள்ளதால், திருச்சியில் மல்கோவா, செந்தூரம் வகை மாம்பழங்கள் விற்பனைக்கு வந்து குவிந்துள்ளது

தமிழகத்தில் கோடை காலம் துவங்கியதும், மாம்பழ சீஸன் துவங்கி விடும். நடப்பாண்டு பிப்ரவரி, இரண்டாவது வாரத்தில் மாம்பழம் விற்பனைக்கு வரத்துவங்கியது. திருச்சி மாநகரில், முப்பதுக்கும் மேற்பட்ட மாம்பழ மண்டிகளும், பழமுதிர் நிலையம், உழவர் சந்தை, காய்கறி மார்க்கெட், ஜூஸ் கடைகள், தெருவோர கடைகள், தள்ளுவண்டி மற்றும் சைக்கிள்களில் வைத்து வீதிகளிலும் மாம்பழம் விற்பனை செய்கின்றனர். துவரங்குறிச்சி, திண்டுக்கல் மாவட்டம், நத்தம், பெரியகுளம் ஆகிய இடங்களில் இருந்து, நாளென்றுக்கு, 25 லாரிகள் (லோடு 5 டன் எடை) விற்பனைக்கு வருகிறது. இந்த ஆண்டு, பங்கனப்பள்ளி, செந்தூரா, மல்கோவா, குண்டு, காலாபாண்டி, கல்லாடி, மின்னாம்பசந்த், பெங்களூரா வகை மாம்பழங்கள் அதிகம் விற்பனைக்கு வந்துள்ளது. மாம்பழ சீஸன் உச்சத்தை எட்டியுள்ளதாலும், ஐரோப்பிய நாடுகளில் இந்திய மாம்பழங்களுக்கு தடை காரணமாகவும், அனைத்து வகையான மாம்பழங்களும் மார்க்கெட்டில் குவிந்துள்ளது.

திருச்சி மாவட்ட பழ வியாபாரிகள் நலச்சங்க துணை செயலாளர் ஹக்கீம் கூறியதாவது: மாம்பழ சீஸன், இன்னும், 40 நாட்கள் நீடிக்கும். மாம்பழ வரத்து தேவைக்கு ஏற்ப உள்ளதால், விலை கட்டுக்குள் உள்ளது. பங்கனப்பள்ளி மாம்பழம் கிலோ, 40 ரூபாய், செந்தூரா, 35 ரூபாய், மல்கோவா, 45 ரூபாய். குண்டு, 45 ரூபாய், காலாபாடி, 35 ரூபாய், கல்லாடி கிலோ, 18 ரூபாய், அதிகபட்சமாக மின்னாபசந்த் கிலோ, 98 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம்.

## புதிய திராட்சை ரகங்கள் பயிரிடும் விவசாயிகள்

**தேனி :** விவசாயிகள் புதிய ரக திராட்சை ரகங்களை பயிரிட்டு வருகின்றனர். தேனி மாவட்டம் ஓடைப்பட்டி பகுதியில், தாம்சன்ரக விதையில்லா திராட்சை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. தற்போது இங்குள்ள விவசாயிகள் மாணிக்சம்பா ரக விதையில்லா திராட்சை ரகத்தை அதிகம் சாகுபடி செய்வதில், ஆர்வம் காட்டி வருகின்றனர்.அதேபோல், கம்பம் பகுதியில் பன்னீர்ரக திராட்Øகு பதிலாக சரத்சீட்லெஸ் என்ற கருப்பு ரக திராட்சை சாகுபடி அதிகரித்து வருகிறது.

புதிதாக சாகுபடி செய்வது மட்டுமின்றி, ஏற்கனவே இருந்த பழைய ரக சாகுபடியை அழித்து விட்டு, விவசாயிகள் மீண்டும் புது ரகங்களை சாகுபடி செய்து வருகின்றனர்

தென்னையில் ஊடுபயிராக வாழை சாகுபடி

**தேவதானப்பட்டி :** தேவதானப்பட்டி அருகே மேல்மங்கலத்தில், தென்னந்தோப்பிற்குள் ஊடுபயிராக வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பணப்பயிராக கருதப்படும் வாழையில், செவ்வாழை, கற்பூரவல்லி, நாட்டுவாழை என பல்வேறு ரகங்கள் உள்ளன. இதில் திசுவாழை சாகுபடிக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. வாழை சாகுபடி செய்து 10 மாதங்களுக்கு பிறகு பலன் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 1000 கன்றுகள் வரை நடவு செய்யலாம். திசுவாழை 400 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. திசுவாழைத் தாரை வியாபாரிகள் நேரில் வந்து கொள்முதல் செய்கின்றனர். மற்ற வழை தார்களை விவசாயிகள் வெட்டி எடுத்து ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு, மதுரை போன்ற ஊர்களில் உள்ள மார்க்கெட்டுகளில் விற்பனை செய்கின்றனர். திசுவாழை நீங்கலாக மற்ற வாழை மரங்களில் வாழைத்தார் வெட்டிய பிறகு, இலைக்கு அறுவடை செய்து வருகின்றனர். நல்ல காற்றோட்டம், தண்ணீர் மற்றும் வெயில் இருக்கும் நிலையில், இலைகள் நீளமாக வளர்கிறது. இலைகளை, தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு அறுவடை செய்து, விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

ஊடுபயிராக வாழை: தேனி மாவட்டத்தில் கம்பம், உத்தமபாளையம், போடி, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் அதிகளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. கம்பம் பகுதியில் திசுவாழை சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பெரியகுளம் தாலுகா, மேல்மங்கலத்தில் தென்னந்தோப்பில் ஊடுபயிராக வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, மூன்று மாதங்கள் ஆன நிலையில், 4 அடி உயரம் வரை வளர்ந்துள்ளது. பொதுவாக தென்னை நடவு செய்து, 2 ஆண்டுகள் வரை மாற்றுப்பயிர்களை ஊடுபயிராக செய்வது வழக்கம். ஆனால் நடவு செய்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகி 20 அடி உயரத்துக்கு மேல் வளர்ந்துள்ள தென்னை மரங்களுக்கு இடையே வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத்துறை அதிகாரியிடம் கேட்ட போது, "தென்னையில் ஊடுபயிர் சாகுபடி என்பது சாத்தியமான ஒன்றுதான். ஆனால் 20 அடிக்கு மேல் மரம் வளர்ந்துள்ள நிலையில் வாழைக்கு தேவையான சூரிய ஒளி கிடைப்பதில் சிரமம் ஏற்படும். ஒரு நாளைக்கு குறைந்தது 12 மணி நேரம் ஒளி தேவை. அவ்வாறு

கிடைக்காத நிலையில் மரம் நல்லமுறையில் வளர்ந்து வரும். ஆனால் வாழைத் தார் வளர்ச்சி இருக்காது, என்றார்.